Hale & Healthy HOSPITAL
Multi Speciality Since 1987
A1, Srinivasapuram, ECR, Thiruvanmiyur, Chennai - 600 041.
Contact
044-43090397


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*





VOL - 4 ISSUE - 6 Editorial : 044-42077328 / 7305837388

## 188 Tree Sappling plantation program remarking 188 countries participation in 44th FIDE chess Olympiad at Chennai...





Tree planting event conducted by Green velachery & RCCV & KLA along with staffs & students of Sindhi model matriculation higher secondary school near Perungudi MRTS station on 23rd July. It was a great morning filled with young fresh minds, ladies and gentlemen.

Green velachery team take this opportunity to thank all student's for their enthusiastic participation & guest for that event Thiru P. Manimaran (councillor ward 177) and Mr.Praveen (RCCV) and Smt. Lakshmi Saikumar ( Principal of the school) and all the guests for inspiring young ones with a crisp speech with great insight. And students were holding placard as a awareness for source segregation.

They thanked Greater Chennai corporation AE & staffs and Urbaser sumeet staffs and all volunteers who have joined for that great event conducted by Green velachery team.

## டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக 44வது சர்வதேச சதுரங்க போட்டி துவங்குவதை முன்னிட்டு நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சி...




டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக 28-07-2022 மகாபலிபுரத்தில் நடைபெற்ற சர்வதேச சதுரங்க விளையாட்டு போட்டியை முதன் முதலில் சென்னையில் துவங்குவதை முன்னிட்டு அதை வரவேற்கும் விதமாக நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சங்கத்தில் உள்ள மாணவ, மாணவிகள் 32, பேர் கலந்து கொண்டார்கள். சதுரங்க போர்டு போல 15-15 அடி அகலத்தில் 32, கட்டங்கள் வரையப்பட்டு 32, மாணவ, மாணவிகளை அந்த கட்டத்தில் நிற்க வைக்கப்பட்டு செஸ் காயின்ஸ் போல அட்டையில் அமைத்து 32, மாணவர்களிடம் வழங்கப்பட்டன. பின்பு செஸ் விளையாட்டு போட்டி விளையாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக புனித அந்தோனியார் மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியை சகோதரி. மரியஜோதி அவர்களும் தயா இன்டர்நேசனல் பள்ளியின் தாளாளர் திருமதி.கவிதா பால் வண்ணநாதன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



## வேளச்சேரி மெயின்ரோடு தண்டீஸ்வரம் பேருந்து நிறுத்தத்தை நவீன படுத்த டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் கோரிக்கை...



சென்னை வேளச்சேரி மெயின்ரோடு தண்டீஸ்வரம் பேருந்து நிறுத்தம் மிகவும் மோசமான நிலையில் பல ஆண்டுகளாக இருக்கின்றன. மேற்கண்ட பேருந்து நிருத்தம் முக்கியமான போருந்து நிருத்தமாகும். இந்த பகுதியில் உள்ள மக்கள் பள்ளிக்கரனை, மேடவாக்கம், தாம்பரம், மற்றும் தரமணி, திருவான்மியூர், அடையாறு ஆகிய பகுதிகளுக்கு செல்பவர்கள் இந்த பேருந்து நிருதத்தைதான் பயன்படுத்தி வருகிறார்கள். முதியவர்கள், பெண்கள் மற்றும் பயணியர்கள் அமர்வதற்கு கூட வசதிகள் இல்லாமல் நீண்ட நேரம் நிற்கும் நிலைமை உள்ளது. வேளச்சேரியில் உள்ள அனைத்து பேருந்து நிறுத்தங்களும் நவீன படுத்தப்பட்டு உள்ள நிலையில் இந்த பேருந்து நிருத்தம் மட்டும் பல ஆண்டுகளாக இதே நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பேருந்து நிருத்தத்தை பயன்படுத்துபவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே மேற்கண்ட பேருந்து நிருத்தத்தை நவீன பேருந்து நிருத்தமாக அமைக்கவேண்டி டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக நெடுஞ்சாலை துறைக்கும், மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் கோரிக்கை வைக்கின்றனர்.




# CLASSIFIED


**WANTED**
Front Desk Executive
(Male / Female)
Ateliers Fitness
Velachery, Behind A2b
Contact
9841030772

**Commercial Space for Rent**
650 Square feet for 23,000/- @ first floor
Diya Complex, Vijayanagar Main Road, Velachery
(Near Ananda Bhavan)
6 month rent as advance
CONTACT
7305837388

INCOME TAX / GST RETURNS, ROC ANNUAL COMPLIANCE / COMPANY INCORP / PF-ESIC eTDS / TRADEMARK REGN / DSC
ASHARAJ BUSINESS CONSULTANTS
CMA.T.RAJKUMAR JAIN
99401 11431
Email:cmarajkumar@gmail.com

**DESIGNING**
Tamil & English DTP designing works
Rs. 750/- only
Contact
7305837388

**COMPUTER SERVICES**
Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software
Contact
9841823435
9841823436

**Mother Land**
Play School, Day Care & After School Care
No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.
Contact
72992 62185
90947 52300


**TMS YOGA AND ART'S CENTER**
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE
Contact
9789098094
8012041624
9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.

**WANTED**
Tele Callers
CONTACT
7305837388

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
Contact : 9444 122 922
TREATMENTS FOR
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ ground floor
Diya Complex, Vijayanagar Main Road, Velachery
(Near Ananda Bhavan)
2 L as advance
CONTACT
7305837388


**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - 1 கிராம் | ₹ 4805 | ₹ 5207 |
| 8 கிராம் | ₹ 38440 | ₹ 41656 |

வெள்ளி விலை - 1 கிராம் ₹ 62.30
1 கிலோ ₹ 62300

## பிச்சாவரம், பள்ளிக்கரணை, கரிக்கிலிக்கு கிடைத்தது சர்வதேச அங்கீகாரம்...



தமிழகத்தில்,சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலம், பிச்சாவரம் அலையாத்தி காடுகுள், கரிக்கிலி பறவைகள் சரணாலயம் ஆகியவை, சர்வதேச அளவிலான ராம்சார் பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளதாக, மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் இதுவரை, 49 இடங்கள் சர்வதேச பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை பறவைகள் சரணாலயம் இடம் பெற்றுள்ளது. இந்நிலையில், ராம்சார் பட்டியலில் சேர்க்கப்படும் புதிய இடங்கள் குறித்த பட்டியலை, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் நேற்று வெளியிட்டார். அதில், தமிழகத்தைச் சேர்ந்த சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலம், கடலுார் மாவட்டம், பிச்சாவரம் அலையாத்தி காடுகள், செங்கல்பட்டு மாவட்டம் வேடந்தாங்கல் அருகில் உள்ள கரிக்கிலி பறவைகள் சரணாலயம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதையடுத்து, சர்வதேச அளவிலான ராம்சார் பட்டியலில் இடம் பெற்றுள்ள தமிழக பகுதிகளின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலம்:-

சென்னையில், வேளச்சேரி முதல் மேடவாக்கம் வரையிலான, 1,482 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும், 190 வகை பறவைகள் வந்து செல்கின்றன.

## சென்னை பீச் - வேளச்சேரி 12 பெட்டிகளுடன் மின்சார ரயில்கள் பயணியர் கோரிக்கை...

சென்னை கடற்கரை - வேளச்சேரி மேம்பால ரயில் பாதையில் 12 பெட்டிகளுடன் மின்சார ரயில்களை இயக்க வேண்டுமென, பயணியர் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இந்த இணைப்பு பணிகள் முடியும் போது, சென்னை கடற்கரை - வேளச்சேரி தடத்தில் பயணியரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.சென்னை கடற்கரை - வேளச்சேரி வரை, தற்போது தினமும் 150 சர்வீஸ் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. தினமும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்து வருகின்றனர்.

எனவே, 12 பெட்டிகளுடன் மின்சார ரயில்களை இயக்க, தெற்கு ரயில்வே இப்போதே திட்டமிட வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. எனவே, பயணியர் தேவையை பொறுத்து, போதிய விரிவாக்க



பணிகளை மேற்கொள்ள தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது.

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** வெள்ளி விலை



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 102.63 | ₹ 94.24 |

**ஆன்மீக தகவல்**

## கருட பஞ்சமி விரதம்

பெருமாளின் வாகனமாக விளங்கும் கருடனுக்கு உரிய விரதம் தான் கருட பஞ்சமி விரதம் ஆடி மாதம் வளர்பிறை பஞ்சமி அன்று இந்த விரதம் கடைபிடிக்கப்படுகிறது.

கருடபஞ்சமி தொடர்பாக கூறப்படும் கதை:-

முன்னொரு காலத்தில் 7 அண்ணன்களுக்கு ஒரே ஒரு தங்கை இருந்தாள். அவர்கள் விறகு வெட்டி பிழைப்பு நடத்தி வந்தனர். ஒருநாள் தங்கை ஆனவள் தன் அண்ணன்களுக்குக் கஞ்சி கொண்டு சென்றாள். அப்போது வானில் கருடன் ஒன்று நாகத்தைக் கவ்விக்கொண்டு சென்றது. அப்போது அந்த நாகம் கக்கிய விஷம் தங்கை கொண்டு சென்ற கஞ்சியில் விழுந்துவிட்டது. அதை அறியாத அவள் அண்ணன்கள் அனைவருக்கும் அந்த கஞ்சியை பரிமாறினாள். அதை உண்ட அவர்கள் அனைவரும் இறந்துவிட்டனர்.

’’தினமும் செய்வது போலத்தானே செய்தோம். இன்று இப்படி ஆகிவிட்டதே... என்று அழுது புரண்ட அவள், தன் அண்ணன்களை காப்பாற்ற வேண்டி இறைவனிடம் மன்றாடினாள். சிவனும், பார்வதியும் அங்கே தோன்றி அவள் அழுகைக்கான காரணத்தை கேட்டனர்.... அவள் நடந்ததைக் கூறினாள். அதற்கு அவர்கள், ’’ இன்று கருடபஞ்சமி. நீ அதை மறந்து, அதற்குரிய பூஜை செய்யாமல் வந்துவிட்டாய். அது தான் உன் பிரச்சினைக்கு காரணம்.

இங்கேயே இப்போதே நாங்கள் சொல்வதை போல் நாகருக்கு பூஜை செய். குங்கணக்கயிற்றில் ஏழு முடிச்சிட்டு, நாகர் இருக்கும் புற்று மண்எடுத்து, அட்சதை சேர்த்து, இறந்து கிடக்கும் உன் அண்ணன்கள் முதுகில் குத்து. அவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள்’’ என்று சொல்லி கருட பஞ்சமியின் முக்கியத்துவத்தை அவளுக்கு உணர்த்தினர். அவளும் அதேபோல் செய்தாள். இறந்து கிடந்த அண்ணன்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். இதை பிரதிபலிக்கும் வகையில் கருடபஞ்சமி விரதம் கடைபிடிக்கப்படுகிறது.

இன்றும் கூட, கருட பஞ்சமி அன்று பெண்கள் தங்கள் உடன் பிறந்தவர்கள் முதுகில் அட்சதை இட்டு குத்தி, அவர்கள் தரும் சீரைப்பெற்றுக்கொள்வதை சில இடங்களில் காணலாம்.

விரதமுறை:-

வளர்பிறை பஞ்சமியில் கருடனுக்குரிய விரதத்தை கடைபிடிக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து குளித்து தூய்மையான ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும்.

தூய்மையான இடத்தில் பூக்களால் அலங்கரித்து ஐந்து நிறங்களைக் கொண்ட கோலங்கள் போட வேண்டும். நடுவில் ஒரு பலகை போட்டு, அதன் மேல் தலை வாழை இலையை விரித்துப் பச்சரிசியைக் கொட்டி வைத்து, அதன் மேல் சக்திக்கு தகுந்தபடி பொன், வெள்ளி, தாமிரம், அல்லது மண் இவற்றில் ஏதாவது ஒன்றால் செய்யப்பட்ட பாம்பின் வடிவம் ஒன்றைச் செய்து அரிசியின் மேல் வைக்க வேண்டும்.

பாம்பின் படத்தின் நடுவில் மஞ்சளால் செய்யப்பட்ட கவுரிதேவியின் வடிவத்தை வைத்து அலங்காரங்கள் செய்து பூஜை செய்ய வேண்டும். பருத்தி நூலால் ஆன மஞ்சள் சரட்டை சார்த்தவும்.

இப்படிப் பூஜை செய்பவர்களின் கோரிக்கைகள் எல்லாம் முழுமையாக நிறைவேறும். சுகல விதமான செல்வங்களையும் பெறுவார்கள். அதோடு முக்தியும் அடைவர். இந்த பூஜை செய்வதனால் நாக தோஷம் நீங்கும்

---

**ஒரே இடத்தில் அமர்ந்தே வேலை செய்வதால் ஏற்படும்**
**கழுத்து வலி, இடுப்பு வலி,**
**கண் சோர்வை போக்க இவற்றை கடைப்பிடிக்கலாம்!**

❖ கை, கால்களை நீட்டி, மடக்கி சோம்பல் முறியுங்கள்.

❖ உடலை வலம், இடமாக 10 முறை திருப்புங்கள். கழுத்தை மேலும், கீழுமாக மற்றும் வலம், இடமாக 10 முறை சுழற்றுங்கள்.

❖ தோள்பட்டையை முன்னும் பின்னுமாக 10 முறை சுழற்றலாம்.

❖ கண்களை 20 நொடிகள் வேகமாக சிமிட்டுங்கள்.

---

# இந்த வார ராசிபலன்

| | |
|---|---|
|  **மேஷம்** உங்களின் அசுத்தமான வாழ்க்கை முறை இந்த வாரம் வீட்டில் உள்ளவர்களைச் செல்ல வைக்கும். இதனால் குடும்பச் சூழலில் மனக்கசப்பு ஏற்படும். |  **துலாம்** இந்த வாரம் பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் சரியான பாராட்டு மற்றும் பதவி உயர்வு கிடைக்கும். ஊங்கள் வருமானம் அதிகரிப்பதால், வருமானம் பெறுகும். |
|  **ரிஷபம்** இந்த வாரம் உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் நிதி சிக்கல்களிலிரு-ந்தும் விடுபட உங்களுக்கு உதவுவா ர்கள், ஆதரவாக இருப்பார்கள். |  **விருச்சிகம்** மாணவர்களுக்கு இந்த வாரம் கல்வித்துறையில் நல்ல பலன் கிடைக்கும். இந்த நேரத்தில் உங்களின் கடந்தகால கடின உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். |
|  **மிதுனம்** இந்த வாரம் உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் உங்கள் உணர்வுகளையும் எண்ணங்களையும் விளக்குவது கடினமாக இருப்பதை உணருவீர்கள். |  **தனுசு** இந்த வாரம் கூட்டாண்மை-யுடன் எந்தவொரு புதிய திட்டத்தையும் தொடங்குவதற்கு சிறப்பாக இருக்கும். இதிலிருந்து உங்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். |
|  **கடகம்** இந்த வாரம் குடும்ப வருமானம் உயரும் வாய்ப்புகள் இருப்பதால், உங்கள் வீட்டின் தேவையை மனதில் கொண்டு வாகனம் வாங்க விரும்பலாம். |  **மகரம்** நீங்கள் ஒருதலைப்பட்சமாக ஒருவரை நேசித்தால், நீண்ட காலமாக உங்கள் விருப்பத்தை சொல்வது மிகவும் கடினமாக இருந்தால், இந்த வாரம் அவர்களிடம் செல்ல முடியும். |
|  **சிம்மம்** இந்த வாரம், அலுவலகமாக இருந்தாலும் அல்லது பணியிடத்தில் உங்கள் வணிகமாக இருந்தாலும், உங்களின் அலட்சியம் உங்களுக்கு நிதி இழப்பை ஏற்படுத்தும். |  **கும்பம்** இந்த வாரம் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே முந்தைய அனைத்து மோதல்களையும் அகற்ற முடியும். |
|  **கன்னி** இந்த வாரம் உங்கள் சில வேலைகளால் உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றி பெருமைப்ப-டுவார்கள். இது குடும்பச் சூழலிலும் அமைதியைத் தரும். |  **மீனம்** இந்த வாரம் வேலையில் இருப்பவர்கள் அலுவலகத்தில் ஆங்காங்கே பேசுவதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பணியிட அரசியலில் சிக்கிக் கொள்விர்கள் . |

---

**பொன்மொழி:-**

**மகத்தான சாதனைகள்**
**சாதிக்கப்படுவது வலிமையால் அல்ல,**
**விடா முயற்சியினால்.**

---

### Damodar Dharmananda Kosambi
### (31 July 1907 – 29 June 1966)




Damodar Dharmananda Kosambi was an Indian mathematician, statistician, philologist, historian and polymath who contributed to genetics by introducing Kosambi map function.

He is well known for his work in numismatics and for compiling critical editions of ancient Sanskrit texts.

His father, Dharmananda Damodar Kosambi, had studied ancient Indian texts with a particular emphasis on Buddhism and its literature in the Pali language.

Damodar Kosambi emulated him by developing a keen interest in his country's ancient history.

Kosambi was also a Marxist historian specialising in ancient India who employed the historical materialist approach in his work.

He is particularly known for his classic work An Introduction to the Study of Indian History. He is described as "the patriarch of the Marxist school of Indian historiography".

Kosambi was critical of the policies of then prime minister Jawaharlal Nehru, which, according to him, promoted capitalism in the guise of democratic socialism.

He was an enthusiast of the Chinese revolution and its ideals, and, in addition, a leading activist in the World Peace Movement.

# Shri Bhuvanalaya Art Academy,Salangai Pooja event...



Guru Smt.Bhuvaneshwari who is succeddfully running Shri Bhuvanalaya Art Academy, where 30+ students are learning Classical Dance. Gonna share about the Salangai Pooja event happened on Oct 14th 2021, in Vani Mahal, T.Nagar, Chennai to celebrate our identity and our heritage. Hall has the capacity of 350+ seats and very pleasant to watch the event. Very excited to share about my students fantabulous performance. We done all pooja's to start with the event and then program continues with dance performance. Without Orchestra team the event would not happen so pleasant and superb performance.

Team as follows:

| | |
|---|---|
| Nattuvangam & Choreography | : Guru Smt. Bhuvaneshwari |
| Vocal | : Akkarai Dr. M.Subhasree |
| Mirudhangam | : Nellai M Hariharasudhan |
| Violin | :Thirumarugal. Dr.S. Dineshkumar |





I'm sure the entire audience along with guest feel extraordinarily devoted vibes after seen those performances, and our hearts palpitate with powerful and strong positive emotions for our country's culture and heritage.

I am pretty sure these performances are more outstanding than what I have witnessed in the past few years.We gave our guests Dr. Smt. Kavitha Srinivasan, M.Com, M.A.Dance, & Munaivar R. Kalishwaran, Loyola College, something that they will not easily forget.

Students posture, movement, steps are so graceful and devotional towards the song they performed. Especially, the audience & guest got excited & happy to see their splendid Performance of mallari, Pot dance, Kurathi dance.

Sharing few info about my students, V.Sandhiya,B.Com., who is learning classical dance for past 5 years and she has completed dance IVth grade exam in bridge academy. She has participated in many cultural events in temple, Sabha, Asia books of record, India books of record, Guinness world record and Navarathiri Festivals.






















# Chutties Corner

## தனித்திறமை பகுதி





KUNDAVI
V STD - A1

### Find the Missing Number ?



If

13 + 1 = 11

25 + 2 = 22

36 + 3 = 33

52 + 9 = 59

THEN

34 + 5 = ?

Solve It :)

### திருக்குறள்

[762]

உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அது.

Through shots and wounds brave heroes hold
Quailing not in fall, the field.

## HAND CRAFT




படத்தில் உள்ள 6 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



### Find 6 Differences ?

ஊங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

# இயற்கை முறையில் மஞ்சள் சாகுபடி

விதை தேர்வு:-

நிலத்தின் தன்மை மற்றும் தட்பவெப்பநிலை இவற்றைப் பொருத்து நல்ல மஞ்சள் ரகங்களை விதைக்காகத் தேர்வு செய்ய வேண்டும். இயற்கைமுறையில் தேர்வு செய்த விதைகள் நல்லது. விரலி மஞ்கள் அல்லது கிழங்கு(குண்டு) மஞ்சளை விதையாகப் பயன்படுத்தலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய 600-800 கிலோ மஞ்சள் தேவை.

விதை நேர்த்தி:-

மஞ்சளை அறுவடை செய்தவுடன் செதிள் பூச்சி மற்றும் பூஞ்சணம் தாக்காதவாறு விதை நேர்த்தி செய்ய வேண்டும். மஞ்சளை நடுவதற்கு முன்பும் விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனால் விதை முளைப்புத் திறன் நன்கு இருக்கும். பூச்சி மற்றும் பூஞ்சாணத் தாக்குதல் இருக்காது.

நடவு முன் விதை நேர்த்தி:-

ஆவூட்டம் - 2 லிட்டர், சூடோமோனஸ்- 1 கிலோ,தண்ணீர் - 100 லிட்டர் இவற்றை நன்கு கலந்து விதை மஞ்களை 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்னர் நடவு செய்யலாம். இவ்வாறு செய்தால் முளைப்புத் திறன் அதிகரிக்கும். செதில் பூச்சி, பூஞ்சாணத் தாக்குதல் வெகுவாகக் கட்டுப்படும்.

நிலத்தேர்வு மற்றும் நிலப்பராமரிப்பு:-

மஞ்சள் பயிரிட்ட தோட்டத்தில் மற்றுமொருமுறை மஞ்சளை பயிரிடக் கூடாது. இவ்வாறு பயிரிட்டால் நூற்புழுத் தாக்குதல் அதிகமாகி பயிர் வளர்ச்சி குன்றி மகசூல் வெகுவாகப் பாதிக்கும். அதுபோல் நூற்புழு அதிகம் தாக்கும் வாழை, மிளகாய், தக்காளி, கத்தரி, கனகாம்பரம் சாகுபடி செய்த தோட்டத்தில் மஞ்களைப் பயிரிடக் கூடாது.

மாற்றுப் பயிராக கரும்பு, நெல் அல்லது தானியப்பயிர்கள் பயிரிடலாம். பயிர் சுழற்சி செய்வது மிகவும் அவசியம். ஆகவே மஞ்சள் பயிரிட்ட தோட்டத்தில் ஒரு வருடம் இடைவெளிவிட்டு மாற்றுப் பயிர் செய்த பின்பு மஞ்சளைப் பயிரிடலாம். நிலத்தை 3-4 முறை உழ வேண்டும்.

கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 10 டன் மக்கிய தொழுஉரம் இட வேண்டும் அல்லது 2 டன் மண்புழு உரம் இட வேண்டும். நிலத்தில் சாம்பல் சத்து குறைபாடு இருந்தால் நெல் உமிச் சாம்பல் ஒரு ஏக்கருக்கு 500கிலோ வீதம் (1 டிப்பர்) கடைசி உழவின்போது இடலாம்.

பயிர் பராமரிப்பு:-

நடவு செய்த ஒரு வாரத்தில் களைகள் முளைக்கத் தொடங்கிவிடும். இவற்றை அகற்றிவிட சுரண்டுகளை செய்ய வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் களைகள் இருப்பின் கைகளை எடுத்து அகற்ற வேண்டும். களைக் கொல்லி போன்ற எந்தக் வேதிக் கொல்லிகளையும் பயன்படுத்தக் கூடாது.

30 நாட்கள் கழித்து களை இருந்தால் மற்றொருமுறை களை அகற்ற வேண்டும். பின்னர் மஞ்சள் செடி, பாரின் நடுவில் வருமாறு மண் அணைக்க வேண்டும். முன்னர் கூறிய பலவகைப் பயிர்களை ஏக்கருக்கு 10-12 கிலோ வீதம் பாரின் நடுவே துவி உடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

நடவு செய்த ஐம்பது நாட்கள் கழித்து பாரில் தூவிவிட்ட பலவகைப் பயிர்கள் நன்கு வளர்ந்து இருக்கும். இவற்றை எல்லாம் பிடுங்கி ஒருபார்விட்டு ஒருபாரில் பரப்பிவிட வேண்டும். இதற்கு மூடாக்கு என்று பெயர். பரப்பிய பாரில் நீர் பாயாதவாறு மண்ணால் மூடிவிட வேண்டும். இதனால் பாதியளவு பாசனம் போதுமானதாகிறது பயிர்களைப் பரப்பி வைப்பதால் நீராவிப் போக்கு கட்டுப்படுத்தப் படுகிறது.

மண்புழுப் பெருக்கம் அதிகமாகி விரலி ஓட்டம் அதிகரிக்கும். நிலம் பொலபொலப்பாக மாறும்.நடவிற்கு 60 நாள் கழித்து தோட்டத்தில் காணப்படும் புல், பூண்டு மற்றும் சுற்றியிருக்கும் செடி,கொடிகளை சேகரித்து பலவகைப் பயிர்கள் பரப்பிய பாரில் போட வேண்டும். அதை அறுவடை வரையில் தொடர்ந்து செய்துவரலாம்.

பயிர்வளர்ச்சி குன்றி இருந்தால் அல்லது ஊக்கம் இன்றி இருந்தால் இதில் சொல்லப்பட்ட வளர்ச்சி ஊக்கியைப் பயன்படுத்தலாம்.அமுதக் கரைசல் (உடனடி வளர்ச்சி ஊக்கி)இதை நடவு செய்த 45 ஆம் நாளிலிருந்து பயன்படுத்தலாம்.

மாட்டுச் சாணம் - 1கிலா,மாட்டுச் சிறுநீர் - 1 லிட்டர்,பனைவெல்லம் - 250 கிராம்,நீர் - 10 லிட்டர் இவற்றை நன்கு கலக்கி 24 மணி நேரம் ஊறவைத்து இதிலிருந்து 1 லிட்டர் கரைசலை எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பான் மூலம் மஞ்சள் இலைகளில் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும். நடவு செய்த 45 நாளில் 50 லிட்டர் கரைசல் போதுமானது.

அறுவடை:-

7 முதல் 9 மாதம் கழித்து மஞ்சள் அறுவடை செய்யலாம். பச்சை வண்ணம் மாறி இலை மஞ்சள் வண்ணமாகி வாடத் தொடங்கும். அச்சமயம் தாள்களை அறுக்கத் தொடங்கலாம். இதன் பின்னர் ஒரு மாதம் கழித்து மண்வெட்டி கொண்டு கிழங்கு மற்றும் விரலியைச் சேதப்படுத்தாமல் அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடைக்குப் பிறகு விதை நேர்த்தி:-

(600-800 கிலோ விதை மஞ்சளுக்கு) ஆவூட்டம் (பஞ்சகவ்யம்) - 2 - 5 லிட்டர் (தயாரிப்புமுறை குறிக்கப்பட்டுள்ளது) சூடோமோனஸ்- 1- 2 கிலோதண்ணீர்- தேவையான அளவு இவற்றை நன்கு கலக்கி விதை மஞ்சள் நன்கு மூழ்குமாறு 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.

பின்னர் விதை நேர்த்தி செய்த மஞ்சளை நிழலில் உலர வைத்து பின்னர் பாதுகாப்பான இடத்தில் வெப்பம் மற்றும் தண்ணீர் புகா வண்ணம் சேமிக்க வேண்டும். மஞ்சள் நடவு செய்வதற்கு முன்பாக மற்றுமொருமுறை விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

## THE 15th PRESIDENT OF INDIA DROUPADI MURMU...



Droupadi Murmu took oath as the 15th President of India on Monday, becoming the country's first tribal and only the second woman to occupy its highest office. Murmu, 64, the youngest President yet, and the first to be born in independent India, was administered the oath of office by Chief Justice of India, N V Ramana in the Central Hall of Parliament.

Wearing a traditional tri-coloured Santhali saree that acknowledged her tribal roots, Murmu, in her maiden address, said her election as President of India was not an individual triumph, but the triumph of Indian democracy that allowed a poor woman to dream and to rise to occupy the highest constitutional office of the Indian republic.

Only the first tribal head of state and the second woman in the top constitutional post, President Murmu succeeds Ram Nath Kovind.

## What Does It Mean ?

- Against the clock: in a great hurry
  Ram was working ***against the clock*** to finish his presentation in time for the upcoming conference.

- Raining cats and dogs: to rain very heavily
  When we were returning from the picnic, it was ***raining cats and dogs*** .

- Turn a deaf ear: to ignore when they complain or ask for something
  The customer had ***turned a deaf ear*** to the pending payments.

By,
Dr. Mrs.Y. Deepika, M.sc., Ph.D.,
Hyderabad.

## யோகாசனம்

### அதோ முகோ ஸ்வானாசனா

<u>பயன்கள் :</u>



- நுரையீரலை பலப்படுத்தி நுரையீரல் சம்பந்தமான கோளாறுகளை போக்க உதவுகிறது.
- உயர் இரத்த அழுத்தத்தை சரி செய்ய உதவுகிறது.
- சீரணத்தை பலப்படுத்துகிறது.
- நாள்பட்ட தலைவலியை போக்க உதவுகிறது.
- தோள், கைகள், கால்கள் ஆகியவற்றை பலப்படுத்துகிறது.
- நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்க்கிறது.
- மாதவிடாய் நிற்கும் கட்டத்தில் (menopause) ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்ய உதவுகிறது.


அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை
YOGA CENTRE
Cell : 9444 122 922


# Entertainment Corner

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



மனைவி: ஏங்க.. புண்ணியம் செய்தவர்களை இங்கிலீஷ்ல எப்படி சொல்லுவாங்க??

கணவன்: Unmarried-னு சொல்லுவாங்க

மனைவி: யோவ் நில்லுய்யா ஓடாத...

❖❖❖

சுரெஷ் : நேத்து ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போகும்போது பக்கத்து வீட்டுக்குப் போயிட்டேன்.

ரமேஷ் : அப்புறம்?

சுரெஷ் : களைப்பா வந்திருப்பீங்க காபியோட வரேன்னு குரல் கேட்டது. சரி, இது நம்ம வீடு இல்லைன்னு புரிஞ்சுக்கிட்டு வெளிய வந்துட்டேன்.

❖❖❖

நண்பா 100 ரூபாய் இருந்த குடு
என்கிட்டே சுத்தமா இல்லடா
பரவலா குடு நான் சுத்தம் பண்ணிக்கிறேன்.

❖❖❖

### சென்ற வார சுடோக்கு விளையாட்டு விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 5 | 9 | 6 | 8 | 2 | 4 | 3 |
| 4 | 2 | 8 | 3 | 7 | 1 | 9 | 5 | 6 |
| 3 | 9 | 6 | 2 | 5 | 4 | 8 | 7 | 1 |
| 1 | 6 | 4 | 8 | 2 | 5 | 7 | 3 | 9 |
| 8 | 5 | 7 | 4 | 9 | 3 | 1 | 6 | 2 |
| 9 | 3 | 2 | 6 | 1 | 7 | 4 | 8 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 4 | 2 | 3 | 9 | 7 |
| 2 | 4 | 9 | 7 | 3 | 6 | 5 | 1 | 8 |
| 5 | 7 | 3 | 1 | 8 | 9 | 6 | 2 | 4 |

## அறுசுவை சமையல்

### சப்பாத்தி லட்டு

**தேவையான பொருட்கள்:**

- ❖ சப்பாத்தி - 6
- ❖ பொடித்த வெல்லம் - 3 டேபிள் ஸ்பூன்
- ❖ நெய் - 2 டேபிள் ஸ்பூன்
- ❖ நறுக்கிய பாதாம் - 1 1/2 டேபிள் ஸ்பூன்
- ❖ ஏலக்காய் பொடி - 1/4 டீஸ்பூன்

**செய்முறை:**

❖ முதலில் சப்பாத்திகளை துண்டுகளாக்கிக் கொண்டு, மிக்சர் ஜாரில் போட்டுக் கொள்ள வேண்டும்.

❖ பின் அதில் பொடித்த வெல்லத்தையும் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

❖ அதன் பின் அரைத்ததை ஒரு பௌலில் போட்டு, அத்துடன் நெய், பாதாம், ஏலக்காய் பொடி சேர்த்து கையால் பிசைந்து விட வேண்டும்.

❖ பின்பு சிறிது கலவையை எடுத்து, அதை இறுக்கமாக உருட்டிக் கொள்ள வேண்டும். இதேப் போன்று அனைத்தையும் உருட்டினால், சப்பாத்தி லட்டு தயார். இந்த லட்டுகளை ஒரு காற்றுப்புகாத டப்பாவில் போட்டு வைத்தால், 2 நாட்கள் வரை வைத்து சாப்பிடலாம்.

குறிப்பு:

❖ சப்பாத்தி லட்டுவிற்கு பாதாமை தவிர முந்திரி, பிஸ்தா என்று எந்த நட்ஸ்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

❖ வெல்லம் இல்லாதவர்கள், சர்க்கரையை கொண்டும் செய்யலாம். ஆனால் சர்க்கரையை பயன்படுத்துவதாக இருந்தால், 2 1/2 டேபிள் ஸ்பூன் பயன்படுத்துங்கள் போதும்.


### சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1. கவி 2. உடல் 3. வில் 4. விரல்
5. பல் 6. உரல் 7. கல்வி 8. கல்
9. கடல்

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

1. ஆமை 2. அம்மிகுலவி 3. கொக்கு
4. கிளி 5. புட்டாம்பூச்சி

## குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்:

1. எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் தெரிவது தெனாலிராமன் தான்
3. செலவெல்லாம் போக எஞ்சியது இது தான்.
6. இலங்கை நகரத்து இசைக்கருவி.
9. தேவதத்தன் தொடுத்தது, சித்தார்த்தன் எடுத்தது.
10. நம் மொழியின் இலக்கணம் கூறும் பழம்பெரும் நூல்.
11. காலின்றி நடப்பனஊ இரையாகிப் பறப்பன.
12. தென்னையை முதலில் செதுக்கிய நகரம்.
15. எஃகை வார்த்து சிலிகான் சேர்த்து' ஏழாம் அறிவை எழுப்ப முயல்பவன்.
16. முழங்காலின் எதிர்கட்சி தலைவர்?
17. திருக்குறளின் கம்பீரம்

மேலிருந்து கீழ்:

1. இவரும் ஓட்டுனர் தான்
2. காதலித்தால் வரும் என்கிறார்கள்.
4. அமுது, நிலவு, உயிர்'
5. தீ மூட்டிய ஆபரணம்?
6. கணியன் பூங்குன்றனார் சொன்னது
7. பேருந்தில் சென்ற மாமல்லன்
8. தனம் தரும், கல்வி தரும்' நாயகியின் துதிப் பாடல்
9. பாவகை ____ ஔவை விநாயகருக்குப் பாடியது
12. பழந்தமிழின் புதிய பெயர்
13. எரிக்கும் உறவு?
14. இதைத் தாண்டி ஒன்றும் இல்லை

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : D. Deepa |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## நீல திமிங்கிலம் பற்றிய தகவல்கள்

1. நீலத் திமிங்கிலங்கள் அருகில் கப்பல்கள் செல்வதால் ஆபத்தா?

பெரிய படகுகளால் நீலத்திமிங்கலும்களுக்கு தான் பிரச்சனை ஏற்படுகிறது. கடலில் இறந்து கரை ஒதுங்கும் நீலத் திமிங்கலங்களில் படகுகளால் இடித்து காயம் ஏற்பட்டு இறந்தவைதான் அதிகம்.இவற்றால் படகுகளை தவிர்க்க முடியாது. காரணம் சரக்கு கப்பல்களை விட நீலத் திமிங்கிலங்கள் மெதுவானவை.

2. நீலத் திமிங்கிலங்களால் மனிதர்களுக்கு ஆபத்தா?

நீலத் திமிங்கலங்களின் தொண்டைப் பகுதி மிகவும் சிறியது. அதனால் ஒரு கூடைப்பந்து அளவில் உள்ள உணவை கூட விழுங்க முடியாது. ஏனவே இவற்றால் மனிதர்களுக்கு எந்த ஒரு தீங்கும் ஏற்படுவது இல்லை.

3. நீலத் திமிங்கிலங்கள் பாட்டுப் பாடும். அவை தனது குட்டிகளுடன் இருக்கும் பொழுதும், இனச்சேர்க்கையின் போதும் பாட்டு பாடும். அதிகபட்சமாக ஒரு நீலத்திமிங்கலம் 6 நிமிடங்கள் வரை பாடி உள்ளது. மனிதனை தவிர பாட்டு பாடகூடிய ஒரே உயிரினம் இவைதான்.

4. நீலத் திமிங்கிலங்கள் நீந்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் இவை தூங்கும்போது நீந்துவது இல்லை. எனவே அதன் எடை காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக கடலின் தரைப் பகுதிக்கு மூழ்கிக் கொண்டே செல்லும். தரைப் பகுதியை தொட்ட உடன் விழித்துக் கொண்டு மீண்டும் நீந்தி மேலே வரும்.

5. நீலத் திமிங்கிலத்தின் உடலில் அதிகப்படியான கொழுப்பு சத்து நிறைந்துள்ளது. எனவே இவற்றால் வருடத்திற்கு 8 மாதங்கள் வரை எந்த ஒரு உணவும் சாப்பிடாமல் உயிர் வாழ முடியும். அதேபோல் உணவு அதிகமாக கிடைக்கும் வேலையில் இவை அதிக அளவில் சாப்பிடும்.

6. ஊலகின் மிகவும் சத்தமான உயிரினம் நீலத்திமிங்கலம்.இவற்றால் கிட்டத்தட்ட 188 டெசிபல் வரை சத்தம் எழுப்ப முடியும். இது ஒரு போர் விமானத்தின் சத்தத்திற்கு ஈடானது.

7. பொதுவாகவே நீலத் திமிங்கிலங்கள் தண்ணீர் குடிப்பது இல்லை.காரணம் இவற்றின் உடம்பிலுள்ள கொழுப்புகள் மூலம் உணவில் இருக்கும் தண்ணீரை இவை பயன்படுத்திக் கொள்ளும்.இந்த கொழுப்பின் காரணமாக நீலத் திமிங்கலத்தின் பாலில் 50 சதவிகிதம் புரதம் உள்ளது.எனவே இவை மனிதர்கள் பயன்படுத்தும் பற்பசை போன்று கெட்டியாக இருக்கும்.

8. நீலத் திமிங்கிலங்கள் மனிதர்களைப் போல காற்றை சுவாசிக்க வேண்டும். எனவே ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் இவை காற்றினை சுவாசிக்க கடலின் மேல்புறத்திற்கு வரும். ஆனால் இவற்றால் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் வரை காற்றினை சுவாசிக்காமல் ஆழ்ந்த கடலில் இருக்க முடியும்

9. ஆனைத்து மீன் இனங்களும் இடது வலது என வாலினை ஆட்டி நீந்தும்.ஆனால் நீலத்திமிங்கலமா? தனது வாலினை மேல் கீழாக ஆட்டி நீந்தும்.

10. 1990"களில் பல லட்சமாக இருந்த நீலத்திமிங்கலம் . ஆனால் தற்பொழுது 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மட்டுமே உலகில் உள்ளன.

திருக்குறள் **கதை**

# சினம் காத்தல்

ஒரு ஊருல ஆனந்த்னு ஒரு சின்ன பையன் இருந்தான்,அவனுக்கு அடிக்கடி கோபம் வரும், அவனோட அப்பா தன்னோட பையன் இப்படி கோபப்படுறது அவனுக்கும் ,அவனோட எதிர்காலத்துக்கும் ஆபத்துனு நினைச்சாரு, அத போக்குறதுக்கு அவர் ஒரு யோசனை பண்ணுனாரு.



அவன கூப்பிட்டு தம்பி வர வர நீ ரொம்ப கோபப்படுற அது உனக்கு நல்லது இல்ல அதனால நீ கோபப்படுரத கொறச்சுக்கிடணும்னு சொன்னாரு.

உடனே அதுக்கு அவன் சொன்னான் என்னால கோபத்த கட்டுப்படுத்த முடியல அப்பான்னு சொன்னான் ,உடனே அவுங்க அப்பா அவன்கிட்ட உனக்கு பிடிச்ச அந்த வேலியில உனக்கு எப்பல்லாம் கோபம் வருதோ அப்ப எல்லாம் ஒரு ஆணி அடின்னு சொன்னாரு.



சொல்லிட்டு ஒரு பை நிறைய ஆணியையும், சுத்தியலையும் கொடுத்தாரு, உடனே அவன் இப்பலாம் கோபம் வருதோ அப்ப எல்லாம் ஆணி அடிக்க ஆரம்பிச்சான்.

முதல் வாரத்துல 100 ஆணி அடிச்ச அவனுக்கு தான் எவ்வளவு கோபப்படுறோம்ன்ற அளவு புரிய ஆரம்பிச்சது, அடுத்த வாரம் 50 ஆணி அடிச்சான், தொடர்ந்து அவனோட ஆணியும் கோபமும் கொறய ஆரம்பிச்சது.



அவனோட கோபம் கொஞ்சம் கொஞ்சமா கொறய ஆரம்பிச்சது ,அப்ப அங்க வந்த அவனோட அப்பா ஒரு திருக்குறள சொன்னாரு

**"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்"**

உன்னோட கோபத்த நீ கட்டுப்படுத்தலைனா அந்த கோபமே உன்ன கொன்னுடும் ,அதுதான் அந்த திருகுறளோட விளக்கம்னு சொன்னாரு.



அதுமாதிரி இப்ப பாரு நீ எவ்வளவு கோபத்தை கட்டுப்படுத்தி இருக்கன்னு ,தொடர்ந்து நல்ல பழக்கங்களை கடைபிடிச்சு, காரணம் இல்லாம வர்ற கோபத்தை கட்டுப்படுதுன்னு சொன்னாரு.

அன்னைல இருந்து தன்னோட கோபத்தை கொறச்சு நல்ல பிள்ளையா மாறிட்டான் ஆனந்த்.







Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH